செய்தி வெளியீடு எண் : 1131 நாள் : 08.06.2023

# செய்தி வெளியீடு

**தமிழ்நாட்டில் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு-2023 போட்டிகள் நடத்துவது தொடர்பாக இந்திய விளையாட்டு ஆணைய அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை அலுவலர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார்.**

தமிழ்நாட்டில் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு-2023 போட்டிகள் நடத்துவது தொடர்பாக இந்திய விளையாட்டு ஆணைய துணை இயக்குநர் (பொது) (SAI) திருமதி. எக்டா விஷ்னாய், (Ms. Esta Vishnoi, Deputy Director General), மண்டல இயக்குநர் டாக்டர் திரு. கிஷோர், (Dr.G.Kishore, Principal/ Regional Director ), துணை இயக்குநர் திரு. சிபாநந்தா மிஸ்ரா, (Mr. Sibananda Mishra, Deputy Director), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், மற்றும் துறை அலுவலர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (08.06.2023) சென்னை முகாம் அலுவலகத்தில் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த ஆலோசனையின் போது தமிழ்நாட்டில் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு-2023 போட்டிகள் நடத்திட ஒன்றிய அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ள நிலையில் இப்போட்டிகளை சிறப்பாக நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு பணிகள், தமிழ்நாட்டில் உள்ள விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தமிழ்நாட்டில் இந்திய விளையாட்டு ஆணைய மண்டல அலுவலகம் (SAI Regional Centre) அமைப்பது தொடர்பான கோரிக்கையின் முன்னேற்றம் குறித்தும், தமிழ்நாட்டில் இந்திய விளையாட்டு ஆணைய திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்தும் அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in